**அக்ஹோனி போரா.. வேக வைக்காமலே சோறாக மாறும் நெல்!**





நெல்லைத்
தூற்றும் சிவலிங்கம்...



அரிசியாக...



சாதமாக...



அக்ஹோனி போரா...

எல்லா மண்ணிலும் பயிரிடலாம்.பூச்சித் தாக்குதல் இல்லை.145 நாள் பயிர்.

பாரம்பரிய ரகங்களாகத் தேடிப்பிடித்து சாகுபடி செய்வதில், இயற்கை வழி விவசாயிகளுக்கு அலாதி ஆர்வம் உண்டு. அதே சமயம், புதுப்புது அறிமுக ரகங்களாக தேடிப்பிடித்து சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.. ரசாயன வழி விவசாயிகள். புதுப்புது ரகங்களாக தேடிப்பிடித்து சாகுபடி செய்யும் திருவண்ணாமலை மாவட்டம், நயம்பாடி மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த ரசாயன விவசாயியான சிவலிங்கம், கொஞ்சம் வித்தியாசமாக.. 'மத்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் 2009 –ம் ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்ட சமைக்காமலே சாப்பிடக்கூடிய ரகமான அக்ஹோனி போரா (Aghoni bora) என்கிற நெல் ரகத்தை சாகுபடி செய்து, நல்ல மகசூல் எடுத்திருக்கிறார். முழுக்க இயற்கை வழி வவிசாய முறையில்!

விதைநெல் உற்பத்தியில் உதயமான தேடல்

எனக்கு மானாவாரி நிலம் 5 ஏக்கரும் கிணத்துப் பாசனத்தோட 5 ஏக்கரும் சேர்த்து மொத்தம் பத்து ஏக்கர் இருக்கு. மானாவாரியாக கடலை, எள், உளுந்து என்று சாகுபடிச் செய்வேன், இறவையில்நெல், கரும்பு போடுவேன். ஆரம்பத்தில் விதைநெல் உற்பத்தி செய்ததால் வேளாண்மைத்துளையிலிருந்து புதுப்புது ரகங்களைக் கொடுத்து சாகுபடி பண்ணச் சொல்வாங்க. அந்தப் பழக்கத்தில் நான் புதுப்புது ரகமாகத் தேடிப்பிடித்து சாகுபடி செய்ய ஆரம்பித்தேன்.

விதைக்காகவே விற்பனை!

விவசாயக் கண்காட்சி, கருத்தரங்குக்கெல்லாம் போறப்போது புது ரக நெல்லை வாங்கிட்டு வந்து சாகுபடி செய்வேன். அந்த மாதிரி ரகங்கள் அறுவடை செய்யும் போது பெரும்பாலும் தெரிந்தவர்கள், பக்கத்து தோட்டத்துக்காரர்களுக்கெல்லாம் விதைநெல்லாவே விற்றுவிடுவேன். இந்தத் முறை எனக்கு 2 கிலோ ‘அக்ஹோனி போரா” ரக விதைநெல் கிடைத்தது. அதை 30 சென்ட் நிலத்தில் விதைத்தேன்.

இந்த ரகத்திற்க்கு ஒரு சிறப்ப இருக்க. இதோட புழுங்கல் அரிசியைப் பொங்க வைக்க வேண்டியதில்லை. தண்ணியில் முக்கால் மணி நேரம் ஊற வைத்து எடுத்து, சுடு தண்ணீரில் பத்து நிமிடம் போட்டு வைத்திருந்தால் சோறாகிவிடும் என்றார்.

காய விட்டால், விரைவில் அறுவடை!

“குளிர் பிரதேசத்தில் விளைவிக்கிறதுக்காக உருவாக்கப்பட்ட ரகம் இது. ஆனாலும் என்னோட வயலில் நன்றாகத்தான் வளர்ந்திருக்கு. இதில்லாமல் தனியா ஒன்றரை சென்டில் பாசுமதி ரகமும் போட்டிருந்தேன்.

எங்கப்பா, சால் முறையில்தான் (பார் முறை நடவு) நெல் நடவு செய்வார். ஒரு வாரம் கழித்து, நிலத்தை நன்றாக காய விட்டு தண்ணீர் கட்டுவார். பதினைந்தாவது நாளில் களை எடுத்துடுவார். இப்படி செய்யும் போது அதிக தூர் வெடிச்சு, பயிர் சீக்கிரமே வளாந்துவிடும். வழகத்தைவிட பத்து நாள் முன்னாடியே அறுவடைக்கு வந்துவிடும். அதே முறையைத்தான் நானும் கடை பிடித்திருக் கொண்டிருக்கிறேன்.

30 சென்டுக்கு 2 கிலோ விதை நெல்!

அக்ஹோனி போரா நெல் ரகத்திற்கு 145 நாட்கள் வயது. அனைத்துப் பட்டங்கள் மற்றும் அனைத்து மண் வகைகளும் ஏற்றவை. 30 சென்ட் நிலத்தில் நடவு செய்ய, 2 கிலோ விதை தேவை. ஒரு சென்ட் நிலத்தைக் களை நீங்கக் கொத்தி, சமப்படுத்த வேண்டும். 2 கிலோ விதைநெல்லில், 200 கிராம் அசோஸ்பைரில்லம் கலந்து, 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு, வடிகட்டி ஈரச் சாக்கில் இட்டு 24 மணி நேரம் கழித்து, நாற்றங்காலில் இருந்து தண்ணீரை வடித்துவிட வேண்டும். 3 மற்றும் 5 – ம் நாட்களும் இதே போல தண்ணீர் கட்டி வடிக்க வேண்டும். தொடர்ந்து தரை தெரியாத அளவிற்கு தண்ணீர் இருக்குமாறு, பராமரித்து வர வேண்டும். 30-ம் நாளில் நாற்று தயாராகி விடும்.

5 அங்குல இடைவெளி!

நாற்றங்கால் தயாரிப்பு ஒரு வாரம் முன்னதாகவே சாகுபடிக்கு தேர்ந்தெடுத்திருக்கும் வயலில் ஓர் உழவு செய்து, 4 கிலோ தக்கைப் பூண்டு விதையை விதைப்பு செய்து, பூ எடுத்தவுடன் மடக்கி இரண்டு உழவு செய்ய வேண்டும். 50 கிலோ மண்புழு உரம், இரண்டரை கிலோ அசோஸ்பைரில்லம் ஆகியவற்றைக் கலந்து வயலில் தூவ வேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 10 அங்குலமும் நாற்றுக்கு நாற்று 5 அங்குலமும் இடைவெளி இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். நான்கு நாட்கள் வரை தரை தெரியாத அளவிற்க்கு தண்ணீர் கட்ட வேண்டும். பிறகு, தண்ணீரை வடித்து ஒரு வாரத்திற்கு காய விட்டு, தண்ணீர் கட்ட வேண்டும்.

பூச்சிகளைக் கட்டுப்படுத்த வசம்பு!

15-ம் நாள் கோனோவீடர் மூலம் களைகளை சேற்றி அழுத்தி 5 கிலோ நுண்ணூட்டக் கலவை உரத்தைத் தூவ வேண்டும். தொடர்ந்து, ஐந்து நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கட்டினால் போதுமானது. 45 – ம் நாளில் களைகள் இருந்தால், மீண்டும் அழுத்திவிட வேண்டும். 65 மற்றம் 80-ம் நாட்களில் 5 கிலோ வசம்புத்தூளை வயலில் தூவ வேண்டும்.

இதுவே பூச்சிகளைக் கட்டுப்படுத்திவிடும் என்பதால், பூச்சிகொல்லிகளுக்கு வேலை இல்லை. வேறு ஊட்டங்களும் கொடுக்கத் தேவையில்லை. 90 –ம் நாளில் கதிர் பிடித்து, 120 –ம் நாளுக்கு மேல் முற்றி, 130 –ம் நாளில் அறுவடைக்குத் தயாராகி விடும்.

30 சென்டில் 8 மூட்டை மகசூல்!

ஒவ்வொரு தூரிலும் நாற்பதிலிருந்து ஐம்பது சிம்பு இருந்தது. ஒவ்வொரு சிம்பிலும் நூற்றைம்பதிலிருந்து இருநூறு நெல்மணிகள். அறுவடை செய்ததில் மொத்தம் 8 மூட்டை (75 கிலோ) நெல் கிடைச்சிருக்கு.

அடுத்த போகத்திலையும் இதை சாகுபடி செய்யலாம் என்று இருக்கிறேன். சொந்த தேவைக்கு போக 500 கிலோ நெல்லை விதைக்காக விற்பனை செய்திடுவேன். கிலோ அறுபது ரூபாய் என்று விற்க முடியும். இதன் மூலமாக 30 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். செலவு போக 23 ஆயிரம் ரூபாய் லாபம்தான். வீட்டுத் தேவைக்கு எடுத்து வைத்த நெல்லிருந்து 60 கிலோ அளவிற்கு அரிசி கிடைக்கும். இதுவும் லாபக் கணக்கில்தான் சேரும்.

| **30 சென்டில் அக்ஹோனி போரா நெல் சாகுபடிக்கு சிவலிங்கம் சொல்லும் வரவு - செலவு கணக்கு..** | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| சணப்பு விதை | 160 | |
| உழவு | 1,000 | |
| நாற்றங்கால் தயாரிப்பு | 300 | |
| நடவுக்கூலி | 1,000 | |
| களை எடுக்க | 1,500 | |
| உயிர் உரங்கள் | 150 | |
| வசம்புத் தூள் | 500 | |
| நுண்ணூட்டக் கலவை | 500 | |
| விற்பனை மூலம் வரவு | | 30,000 |
| மொத்தம் | 6,710 | 30,000 |
| நிகர லாபம் | | 23,290 |

**தொடர்புக்கு**

சிவலிங்கம், அலைபேசி : 88834 40295, 77084 13085.

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி 10.8.11